## பழங்குடியின மக்கள் இன்றைக்கு உயர் கல்வியில் சிறந்து விளங்குகிறார்கள்

# பழங்குடியின மக்களின் மேம்பாட்டுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்துகிறார் முதல்வர்!

### பல்வேறு மாநிலங்கள் பங்கேற்ற - 65 அமைப்புகளின் கண்காட்சியைத் தொடங்கி வைத்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேச்சு!

சென்னை, நவ.16

பழங்குடியின மக்களின் மேம்பாட்டுக்காக பல்வேறு திட்டங்களை தீட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செயல்படுத்தி வருகிறார் என்று இந்தியாவின் பல்வேறு மாநிலங்களின் இருந்து வந்த 65 அமைப்புகள் பங்கேற்ற கண்காட்சியைத் தொடங்கி வைத்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசுகையில் குறிப்பிட்டார்.



இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து பங்கேற்று தங்களுடைய தயாரிப்புகள் 65 விற்பனையகங்களுடன் கூடிய "AADI MAHOTSAV" கண்காட்சி - சென்னை திருவான்மியூரில் உள்ள கலாசேத்ராவில் தொடங்கி நேற்று (15-11-2024) வைத்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசியதாவது;

37 கோடி பேர் 7000 மொழிகளில் பேசும் தன்மை என்பது இன்றளவும் நிலவி வருகிறது. 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பண்பாட்டு நடத்தைகள் இருந்து வருகிறது. குறிப்பாக ஒரே ஊரில் கூட வசிப்பவர்கள், ஒரு மலைப்பகுதியில் வசிப்பவர்களுக்கும், மற்ற மலைப்பகுதியில் வசிப்பவர்களுக்கும், பண்பாட்டு நடத்தைகள் என்பது மாறுபட்டதாக இருக்கும். அந்த வகையில் 5000 க்கும் மேற்பட்ட பண்பாட்டு நடத்தைகள் என்பது இருந்து வருகிறது. இந்தியாவைப் பொறுத்தவரை 702 வகையிலான பழங்குடியினர்கள் வசித்து வருகிறார்கள். உலகம் முழுவதும் ஏராளமான பேர் இருந்தாலும் இந்தியாவில் வசிக்கும் இனங்களின் எண்ணிக்கை 702. இவர்கள் அடர்ந்த மலைகளிலும், வனங்களிலும், சமவெளிகளிலும், தீவுகளிலும் பழங்காலத் தன்மை மாறாமல் வசித்து வருபவர்கள். தமிழகத்தை பொறுத்தவரை தோடர்கள், இருளர்கள், போற்றர்கள், கசவர், முள்ளு குறும்பர், ஒட்ட குறும்பர், பணியர், காட்டுநாயக்கர், குறவர், பலியர், மலிமரசர், மலைவேடர், காணிக்காடர், மலையாளி, காடர், முதுவர் என்று 36 வகையான பழங்குடியினர் தமிழகத்திலே வாழ்ந்து வருகிறார்கள்.

**நீலகிரியில் வசிக்கும் பழங்குடியினர்**

உலகம் முழுவதும் பல்வேறு பெயர்களில் இந்த பழங்குடியினர்கள் வசித்து வந்தாலும் தமிழகத்தில் 36 வகையானவர்கள் வசித்து வருகிறார்கள். இதில் நீலகிரி மாவட்டத்தில் மட்டுமே ஏழு வகையான பழங்குடியினர்கள் வசித்து வருகிறார்கள். 36 வகையினர் இந்த பழங்குடியினர் பட்டியலில் இருந்தாலும், அண்மையில் புதிதாக பழங்குடியினர் பட்டியலில் இணைக்கப்பட்டிருக்கிற சமூகம் நரிக்குறவர்கள். மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது நரிக்குறவர் சமூகத்தை நரிக்குறவர் என்று சொல்லக்கூடாது. பண்பாட்டு முறைகளில் மிக சிறந்தவர்களாக இருந்து கொண்டிருக்கின்ற காரணத்தினால் இனிமேல் நான் ' நெறிக் குறவர்கள்' என்று அழைப்பேன் என்று சொன்னார். நரிக்குறவர் சமூகம் அன்றிலிருந்து நெறித் தவறாமல், நெறிபிறழாமல் வசித்து வருபவர்கள் என்பதால் நெரிக்குறவர் சமூகம் என்றே அழைக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் இந்த நரிக்குறவர் சமூகம் பழங்குடியினர் பட்டியலைப் பொறுத்தவரை முப்பத்தி ஏழாவதாக அண்மையில் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழகத்தை பொறுத்தவரை இந்த சமூகத்தைச் சார்ந்தவர்கள் ஏராளமான பேர் கல்வியிலும் சிறந்து விளங்கி சாதிக்க தொடங்கி இருக்கிறார்கள். மிகச் சிறந்த பொறுப்புகளில் இச்சமூகத்தைச் சார்ந்தவர்கள் இன்றைக்கு அலங்கரிக்க தொடங்கி இருக்கிறார்கள். பிரசவித்த மறுநாளே தேர்வு எழுதி 23 வயதில் மிகப்பெரிய சாதனை படைத்த ஸ்ரீபதி திருவண்ணாமலை மாவட்டத்தில் இருக்கிற செங்கம் மலையைச் சேர்ந்த பழங்குடி இன பெண்ணாவார். இவர் சிவில் நீதித்துறைக்கு தேர்வில் தேர்வாகி நீதிபதியாகி சாதனை படைத்திருக்கிறார் என்பது மிகப்பெரிய அளவில் நாம் எல்லோரும் பெருமைப்படத்தக்க நிகழ்வு.

அதேபோல்தான் நீலகிரி மாவட்டத்தில் கோத்தகிரி அருகில் இருக்கிற சோலூர் வட்டம் தும்பி வெட்டுப் பகுதியில் திருவண்ணாமலை மாவட்டத்தில் எப்படி ஸ்ரீபதி நீதிபதி ஆகியிருக்கிறாரோ அது போல் தான் பழங்குடி இனத்தைச் சார்ந்த மாணவி ஸ்ரீமதி நீட் தேர்வில் தேர்வாகி வெற்றி பெற்று திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருத்துவம் பயின்று வருகிறார் என்பதும் மகிழ்ச்சிக்குரிய ஒன்று.

**உயர் கல்வியில் பழங்குடியினர் முன்னேற்றம்!**

எனவே இன்றைக்கு பழங்குடியின மக்கள் நீதிபதிகளாகவும் மருத்துவர்களாகவும் வலம் வருகிற வகையில் இன்றைக்கு கல்வி அறிவு மிகப் பெரிய அளவில் வளர்ந்து வருகிறது. கொரோனாப் பேரிடர் காலத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு நீலகிரி மாவட்டத்தில் இருக்கிற மக்கள் தான் முதன் முதலில் 100% கொரோனா தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களில் முதன்மையானவர்களாக இருந்தார்கள். அந்த வகையில் இந்தியாவிலேயே தடுப்பூசி முழுமையாக செலுத்திக் கொண்டவர்கள் என்கின்ற வகையில் நம்முடைய நீலகிரி மாவட்டம் முதலிடத்தை பிடித்தது. அந்த வகையில் இந்த மக்கள் அரசின்திட்டங்களுக்கு ஒத்துழைப்பை நல்குபவர்களாக இருக்கிறார்கள். நான் கென்யா, தான்சானியா போன்ற பல்வேறு ஆப்பிரிக்க நாடுகளுக்கு சென்றிருக்கிறேன். அந்தக் கென்யா, தான்சானியா போன்ற நாடுகளில் வசிக்கிற பனங்கும் பழங்குடியின மக்களை 'மாசாய்' என்று அழைப்பார்கள்.

ஆப்பிரிக்க பழங்குடியினர் பல்வேறு வகைகளிலான பெயர்களில் இன்றைக்கு உலக அளவில் புகழ்பெற்று விளங்குகிறார்கள். மாசாய் பழங்குடியினர், ஹாமர் பழங்குடியினர், வன்னியன்போல் பழங்குடியினர், கர்மா துக்மா பழங்குடியினர், உடாப் பழங்குடியினர், சீவா பழங்குடியினர், துலாபி பழங்குடியினர் என்று பல்வேறு வகைகளில் உலகம் முழுவதும் ஒரு பண்பாட்டு புரிதலோடு மிகச் சிறந்த வகையில் வளர்ந்து வருகிறார்கள்.

இந்த மக்களிடையே பெரிதும் பரவும் நோய்கள் தல சீமியா, ஹீமோகுளோபினோபதி, சிகல் செல் அனீமியா போன்ற நோய் பரவல்கள் அதிகரித்து வருகிறது. இந்த ஹீமோகுளோபினோபதி, சிகல் செல் அனிமியா போன்ற மரபு நோய்களை கண்டறிந்து அவர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கும், மருத்துவம் பார்ப்பதற்கும் மக்கள் நல்வாழ்வுத்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அந்த வகையில் நான் சத்தியமங்கலம் பகுதியில் இருக்கிற தாளவாடி பகுதிக்கு சென்று இந்தத் திட்டத்தை நேரடியாக தொடங்கி வைத்திருக்கிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பழங்குடியினர்கள் எங்கே எல்லாம் அதிகமாக வசித்து வருகிறார்கள் என்றால் திண்டுக்கல் மாவட்டத்தில் ஒட்டன் சத்திரத்திலும், கொடைக்கானலிலும் பழனியிலும், ஈரோடு மாவட்டத்தைப் பொருத்தவரை சத்தியமங்கலம் மற்றும் தாளவாடி பகுதிகளிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் திருவட்டார், மேல்புறம் மற்றும் தோவாளை பகுதிகளிலும், திருச்சி மாவட்டத்தை பொருத்தவரை துறையூர் மற்றும் ஒப்பிலியாபுரம் பகுதிகளிலும் திருப்பத்தூர் மாவட்டத்தை பொருத்தவரை மாதனூர் மற்றும் நரியம்பட்டு பகுதிகளிலும் போன்ற 12 வட்டாரங்களில் இந்த மரபணு நோய் உள்ளவர்களுக்கான சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது.

**மலைப் பகுதிகளில் 2000 கிராமங்கள்!**

தமிழகத்தில் இருக்கிற ஏராளமான மலைப்பகுதியில் வசித்து வருகிற இவர்களுக்கு நான் ஏற்கனவே சொன்ன மரபு வழி நோய்கள் 12 வட்டாரங்களில் தற்போது மரபணு ஆலோசனைகளும், சிகிச்சைகளும் வழங்கப்பட்டு வருகிறது. அந்த அளவுக்கு இன்றைக்கு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு இந்தப் பணிகள் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மலைவாழ் மக்களை பொருத்தவரை அவர்களுக்கு தேவையான மருத்துவ உதவிகள் செய்வதற்கு மக்களை தேடி மருத்துவம் என்ற மகத்தான திட்டத்தின் மூலம் புதிய வாகனங்கள் இன்றைக்கு பயன்பாட்டிற்கு நானே நேரடியாக சென்று ஏற்காடு மலைப்பகுதியில் தொடங்கி வைத்தேன். அந்த வாகனங்கள் இன்றைக்கு எல்லா மலைப்பகுதிகளிலும் வாகன பாதை இருக்கிற வகையில் சென்று மக்களுக்கு மருத்துவ பரிசோதனைகள் மற்றும் மருத்துவ உதவிகளை தருகிறது. அந்த வகையில் இன்றைக்கு தமிழகத்தில் ஏறத்தாழ 2000 கிராமங்கள் மலைப்பகுதிகளில் இருக்கிறது. நான் இதுவரை 300க்கும் மேற்பட்ட மலை கிராமங்களுக்கு வாகனங்கள் செல்ல முடியாத மலை கிராமங்களுக்கும் நடந்தே சென்று அந்த மக்களை சந்தித்து வருகிறேன். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருக்கிற பெத்தகிலாளம் என்ற பகுதிக்கு ஒரு எட்டிற்கு மேற்பட்ட கிராமங்களில் மலைகளில் நடந்து பாதை வசதிகளே இல்லாத கிராமங்களில் 15 கிலோ மீட்டர் நடந்து அந்த பகுதியில் வசிக்கிற மக்களை சந்தித்து அவர்களுக்கு தேவையான மருத்துவ வசதிகள் என்கிற வகையில் பெட்டகிலாளம் பகுதியில் ஆம்புலன்ஸ் ஒன்று தினமும் நிறுத்தி வைக்கிற பணியினை அங்கு செய்திருக்கிறோம்.

சேலம் மாவட்டத்தில் அதே போன்றதொரு சருகு மலை பகுதி , நாமக்கல் மாவட்டத்தில் போதை மலை, போன்ற பல்வேறு இடங்களில் நீலகிரி மாவட்டத்தில் குக்கிராமங்கள், கொடைக்கானலில் ஏராளமான குக்கி கிராமங்கள், சத்தியமங்கலம் தளவாடி பகுதிகளில் ஏராளமான குக்கிராமங்கள் என்று இது வரை ஒரு 250 லிருந்து 300 கிராமங்களுக்கு நான் சென்று இருக்கிறேன்.

என்னுடைய இலக்கு லட்சியம் என்பது அனைத்து மலை கிராமங்களுக்கும் சென்று அந்த மக்களின் மருத்துவ தேவையை கேட்டறிந்து நிறைவேற்றுவது என்பது வெகு விரைவில் அவற்றை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு செய்து முடிப்பேன் என்கின்ற நம்பிக்கை இருக்கிறது.

அண்மையில் தான் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு ஒரு கோடியே 60 லட்சம் மதிப்பீட்டில் 25 இருசக்கர வாகன ஆம்புலன்ஸ் திட்டம் தொடங்குவதற்குரிய அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. இன்னும் ஒரு 15 நாட்களில் நானும் பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களும் ஜவ்வாது மலைப்பகுதியில் இருசக்கர வாகன ஆம்புலன்ஸ் திட்டத்தை தொடங்கி வைக்க இருக்கிறோம். அதாவது பெரிய வாகனங்கள் செல்ல முடியாத கிராமங்களுக்கு இருசக்கர வாகன ஆம்புலன்ஸ் திட்டம் ஒன்று தமிழ்நாட்டில் புதிதாக செயல்படுத்தப்பட இருக்கிறது. அந்தத் திட்டம் வெகு விரைவில் ஜவ்வாது மலை பகுதி தொடங்கி வைக்கப் பட இருக்கிறது.

அந்த ஆம்புலன்ஸை பொருத்தவரை பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட ஒரு ஆம்புலன்ஸ். அதில் ஓட்டுநருக்கு பக்கத்தில் ஒரு அறை போன்ற ஒரு பகுதி. அதில் நோயாளர் படுத்துக் கொண்டு வரலாம் உட்கார்ந்து கொண்டும் வரலாம். அது போல சிறப்பு வசதிகளுடன் ஆம்புலன்ஸ் திட்டம் முதல் முறையாக 25 ஆம்புலன்ஸ்களை உருவாக்கி இருக்கிறோம். இப்படி பழங்குடியினர்கள் பயன் பெறுகிற வகையில் ஏராளமான திட்டங்கள் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில் சென்னையில் பிரதான பகுதிகளில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்து அசாமில் இருந்து மேற்குவங்கத்திலிருந்து பல்வேறு மாநிலங்களில் இருந்து கூட இன்றைக்கு பழங்குடியின மக்கள் தங்களுடைய படைப்புகளை தங்களுடைய தயாரிப்புகளை பொது மக்களின் பார்வைக்கு விற்பனைக்கு ஒரு 65 அமைப்புகளின் மூலம் ஸ்டால்கள் வைத்திருக்கிறார்கள். வருகை தந்திருக்கிற பொதுமக்கள் சென்னையின் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் இதற்கு பெரிய அளவில் நாம் ஆதரவு தந்து அவர்களுடைய தயாரிப்புகளை ஊக்கப்படுத்திட வேண்டும். Hand made- கைத்திறன் மிக்க அவர்களின் திறமையை வெளிக்கொணர்ந்து செய்யப்பட்டு இருக்கிற உபகரணங்களை வாங்கி அவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டும் என்கிற வகையில் இந்த கண்காட்சியை தொடங்கி வைப்பதில் பெருமிதம் அடைகிறேன்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசினார்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (15.11.2024) ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சகம், இளைஞர் விவகாரம் & விளையாட்டு அமைச்சகம், தமிழ்நாடு மை பாரத் நேரு யுவகேந்திரா மற்றும் தனியார் கல்லூரி இணைந்து நடத்திய காஷ்மீர் இளைஞர் கலை, பண்பாடு, கலாச்சார பரிமாற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற காஷ்மீர் இளைஞர்கள் மற்றும் இளம் பெண்கள் சந்தித்து தமிழ்நாட்டில் தங்களின் அனுபவங்கள் குறித்து கலந்துரையாடினார்கள். இந்நிகழ்வில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, மை பாரத் நேரு யுவகேந்திரா மாநில இயக்குநர் செந்தில்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி மாவட்ட நிர்வாகிகள் மகளிர் உறுப்பினர் சேர்க்கை படிவங்களை மாவட்ட செயலாளரும் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் அவர்களிடம் வழங்கினார்கள். ஜெயலலிதா சசிதரன், சுகன்யா, நளாயினி, பிரபாவதி, நிர்மலா ஜெயசித்ரா, ரத்தினகுமாரி, ஆலாடு அமுதா, வெற்றிசெல்வி, விஜயாமாலா, லட்சுமி உள்ளிட்ட நிர்வாகிகள் படிவங்களை ஒப்படைத்தனர்.




கழக தலைவர் முதல்வர் ஆணைக்கிணங்க மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவுறுத்துதல்படி எழும்பூர் வடக்கு பகுதி 77 வது வார்டுக்குட்பட்ட 77 – 77 (அ) வட்டங்களின் நிர்வாகிகள், பாகமுகவர்கள் ஆலோ சனைக் கூட்டம் வட்டச் செயலாளர் வி.அபாய் தலைமையில் வட்டச் செயலாளர் தி.தயாளன் முன்னிலையில் பகுதிச் செயலாளர் – சென்னை மாநகராட்சி நியமனக் குழு உறுப்பினர் சொ.வேலு எம்.சி. தொகுதி மேற்பார்வையாளர் டாக்டர் பி.எம்.யாழினி ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினர். இந்நிகழ்வில் எம்.தில்லை குமார், கே.வள்ளி, எம்.காந்தி, மு.கமலக்கண்ணன், டி.கே.விஜயராஜ், எல்.ஐ.சி. டி.கர்ணா மற்றும் நிர்வாகிகள் பாக முகவர்கள் பங்கேற்றனர்.

# 38வது வட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி!

## வட்டச் செயலாளர் நேதாஜி யு.கணேசன் எம்.சி,வேண்டுகோள் !

சென்னை நவ.16-

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி, 38வது வட்ட செயலாளர் நேதாஜி யு.கணேசன் எம்.சி,விடுத்துள்ள அறிக்கை வருமாறு

சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, அறிவுறுத்தல் படி சட்ட மன்ற உறுப்பினர் ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ, தேர்தல் பொறுப்பாளர் கே.வி. லோகேஷ், மேற்கு பகுதி செயலாளர் எஸ். ஜெபதாஸ் பாண்டியன் ஆகியோர் முன்னிலையில் நேதாஜி யு.கணேசன் எம்.சி, எனது தலைமையில் 38வது வட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரி பார்க்கும் பணி குறித்து (16.11.2024 சனிக்கிழமை) (17.11.2024 ஞாயிற்றுக்கிழமை) மற்றும் (23.112024 சனிக்கிழமை) (24 .11.2014 ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நான்கு நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை, பொதுமக்கள் தங்களது வாக்குகளை சேர்த்தல், நீக்குதல், பிழை திருத்தம், இடமாறுதல் சிறப்பு முகாம் நடைபெறுகிறது.

நேதாஜி நகர் நடுநிலைப் பள்ளி, நேதாஜி நகர் 5வது தெரு 5 பாகங்கள், சீதாக்காதி மெட்ரிகுலேஷன் உயர்நிலைப்பள்ளி, நேதாஜி நகர் 3வது தெரு 4 பாகங்கள், அறிஞர் அண்ணா நடுநிலைப்பள்ளி, நேதாஜி நகர் 1வது தெரு 4 பாகங்கள், இ.சி.ஐ. மெட்ரிகுலேஷன் உயர்நிலைப் பள்ளி, எண்ணூர் நெடுஞ் சாலை 3 பாகங்களும், உள்ள பட்டியல் வாக்காளர்கள் புதிதாக பெயர் சேர்த்தல், நீக்குதல், திருத்தம், முகவரி மாற்றம், இரட்டை பதிவு, புகைப்படம் மாற்றம் ஆகிய பணிகளை செய்திட வேண்டுமென தங்களுடைய பெயர் வாக்காளர் பட்டியல் உள்ளதா என சரி பார்த்து கொள்ளவும் இந்த சிறப்பு முகாம் பயன்படுத்தி கொள்ள வேண்டும் மேற்கண்ட நிகழ்ச்சியில் 38 வது வட்டக் கழக நிர்வாகிகள் வட்டத்திற்கு உட்பட்ட (பி.எல்.ஏ2 ) பாக உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், சார்பு மன்ற நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் அனைவரும் கலந்து கொண்டு பணியாற்றிட வேண்டுமென வட்டக் கழக செயலாளர் நேதாஜி யு.கணேசன் எம்.சி, கேட்டுக் கொண்டுள்ளார்.

### வட்டப் பொறுப்பாளர் க.கலைச்செல்வன் தலைமையில்

# இராயபுரம் 49வது வட்டத்தில் ஆலோசனைக் கூட்டம்!

## இரா. செந்தில்குமார் - இரா.சிவக்குமார் - எல்.சீனிவாசன் பங்கேற்பு!

சென்னை, நவ.16-

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்குப் பகுதி 49வது வட்டக் கழக பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட க. கலைசெல்வன் தலைமையில் அறிமுக கூட்டம் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அவர்களின் அறிவுறுத்தலின்படி ராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் டாக்டர் அ. சுபேர்கான் ஆகியோரின் ஆலோசனைப்படி சிரங்கம்மாள் தெருவில் அமைந்துள்ள திப்பனம் பட்டி நாடார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு தலைமை பொதுக்குழு உறுப்பினர் வே.சிவகுமார், முன்னாள் வட்டச் செயலாளர் எல். சீனிவாசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

வட்ட அவைத் தலைவர் எம். பழனி, வட்டக் கழக நிர்வாகிகள் எம்.வி. நரசுமணிக் குமார் ஜி. வனிதா, பகுதி பிரதிநிதிகள் ஜி. கோதண்டன், தா.கு. பன்னீர்செல்வம், இ. கதிரவன், பா.சுதாகர், கே.பாஸ்கர் ஆகியோர் வரவேற்றனர்.

இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார், வட்டக் கழக பொறுப்பாளர் க.கலைசெல்வன் அறிமுகப்படுத்தி ஆலோசனை வழங்கி பேசினார்.

பகுதிகள் நிர்வாகிகள் த.ஜெயபாலன், பி.சேகர், கு. சுந்தர், ஜெயலட்சுமி, லோ. மோகன், முன்னாள் பகுதி அவைத் தலைவர் எ.வேணுகோபால், மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் மதன் ராஜ், கிருஷ்ண ஹரிஹரன் வி.கலைச்செல்வன், ஜி.விநாயகமூர்த்தி, எம்.தங்கராஜ், பாலகிருஷ்ணன், ஆர்.பாரதிதாசன், எஸ். ராஜசேகர், கே.அரசு, எஸ்.சங்கர், ஆர். எம்.ராமமூர்த்தி, எஸ்.முத்துக்குமார், கே. பாஸ்கர், ப.நித்திஷ் குமார், க.பிரதாப் சந்தர், இ.கே. விக்ரம், ஜெ. தினேஷ்குமார், கே. ராஜேஷ் பாஸ்கர், (ஜி. ரேவதி, எஸ். சின்னசாமி, கன்னியப்பன், ஜெயபால், மோகனசுந்தரம், ஆர். மோகன்ராஜ், ஜி. மோகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

வட்ட கழகப் பொருளாளர் ஆர்.கோபிநாத் நன்றியுரை ஆற்றினார்.

### சென்னை வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் கவனத்திற்கு

# கழகத் தோழர்கள் - வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) - பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) - வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் - வாக்காளர் சேர்த்தல் பணியை சிறப்பாக செய்திடுவீர்!

மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01-01-2025 தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 29-10-2024 அன்று வெளியிட்டுள்ளது. சென்னை வடக்கு மாவட்டத்திலுள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் 29-10-2024 முதல் 28-11-2024 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் - திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இது தவிர தமிழ்நாடு மாநில தலைமை தேர்தல் அதிகாரியால் அறிவிக்கப்பட்ட 16-11-2024, 17-11-2024 மற்றும் 23-11-2024, 24-11-2024 சனி, ஞாயிறு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, இந்த நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும்.

1-1-2025 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2025-ஆம் ஆண்டு ஜனவரி 1-ஆம் தேதி 18 வயது நிரம்பியவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம்பெறாத பெயர்களையும் புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும். தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

| | |
|---|---|
| **பட்டியலில் பெயர் சேர்த்தல் பெயர் நீக்கம்** | **படிவம் – 6**<br>**படிவம் – 7** |
| **தவறுகள் திருத்தம், சட்டமன்ற தொகுதிக்குள் திருத்தம், முகவரி மாற்றம், வாக்காளர் அட்டை நகல்** | **படிவம் – 8** |
| **அயல்நாடு வாழ் வாக்காளர்களை சேர்க்க** (NRI Voters) | **படிவம் – 6 A** |
| **ஆதார் எண் வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்க** | **படிவம் – 6 B** |

**மேலும் சேர்ப்பதற்கு இணையதளம் : www.nvsp.in, www.voterportal.gov.in**

| | |
|---|---|
| **1. பெயர்களைச் சேர்க்க/ நீக்க திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம்** | **29-10-2024 முதல்<br>28-11-2024 வரை** |
| **2. சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள்** | **16-11-2024, 17-11-2024 மற்றும்<br>23-11-2024, 24-11-2024** |
| **3. இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள்** | **06-01-2025** |

மேலும், மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும், சென்னை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், பகுதி செயலாளர்கள் - வட்ட செயலாளர்கள் இந்த பணியினை ஒருங்கிணைத்து அதன் விவரத்தினை உடனடியாக மாவட்டக் கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு: வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA2-க்கான மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC). இந்த பணியினை முழுமையாக ஈடுபட்டு 2026 சட்டமன்ற தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLO-க்களுடன் உடனிருந்து கண்காணிக்க கேட்டுக்கொள்கிறேன்.

**ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.**

பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.